**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**

**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், ஆடித்திங்கள் 13 ம் நாள்

**அசல் வழக்கு எண். 33/2025**

**CNR No.TNTI14-000042-2025**

ஆர்.சதீஸ்குமார் ... வாதி

/எதிர்/

1. கலைச்செல்வி
2. ரவி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 24.07.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வெங்கடசுப்பு, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ஈஸ்வரமூர்த்தி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 2 ம் பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், இரு தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**தீர்ப்புரை**

தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு 12 சம பாகங்களாக பிரித்து அதில் தொடர்ச்சியான 4–1/2 சமபாகங்களை வாதிக்கு ஒதுக்கி தனிசுவாதீனம்

வழங்கும்படிக்கும், தாவா செலவுத்தொகை வாதிக்கு பிரதிவாதிகளால் கிடைக்கும்படிக்கும், வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :–**

i) வாதியின் தகப்பனார் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி வாதியின் அத்தை மற்றும் 2ம் பிரதிவாதியின் சகோதரி ஆவார். 2ம் பிரதிவாதிக்கு முன்பு அழகுநாச்சிமுத்து என்ற பெயர் இருந்து தற்போது ரவி என மாற்றியுள்ளார். தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு தகப்பனாரும், வாதிக்கு தாத்தாவுமான பழனிசாமி என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட கூட்டுக் குடும்ப சொத்தாகும். மேற்படி பழனிசாமி தாவா சொத்தை தனது மைனர் மகனுடன் சேர்த்து கடந்த 23.03.1987 ல் அடமானம் வைத்து அனுபவித்து வந்து மேற்படி பழனிசாமி கடந்த 07.05.2003 ல் பிரதிவாதிகளையும் அவரது மனைவி லட்சுமியையும் வாரிசாக விட்டு விட்டு இறந்து விட்டார்.

ii) மேற்படி பழனிசாமி இருந்தபோதே 1ம் பிரதிவாதிக்கு உரிய சீர் சிறப்புகள் செய்து கடந்த 1987ம் வருடம் திருமணம் செய்து வைத்துவிட்டார். தாவா சொத்தில் மேற்படி பழனிசாமி இறந்த தேதியில் பழனிசாமிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் தலா சரிபாதி பாத்தியம் இருந்தது. 2ம் பிரதிவாதியின் சரிபாதி பாகத்தில் வாதிக்கு 2ம் பிரதிவாதியின் மகன் என்ற முறையில் சரிபாதி பாகம் சட்டப்படி பாத்தியம் ஆகிறது. பின்னிட்டு மேற்படி பழனிசாமி இறந்து விட்டதால் அவரது சரிபாதி பாகம் பிரதிவாதிகளுக்கும், பிரதிவாதிகளின் தாயார் லட்சுமிக்கும் தலா 1/3 பாகம் பாத்தியம் உள்ளது. பின்னிட்டு லட்சுமி கடந்த 12.10.2020 ல் இறந்து விட்டார். எனவே தாவா சொத்தில் வாதிக்கு 12 ல் 4–1/2 பாகமும், 2ம் பிரதிவாதிக்கு 12 ல் 4–1/2 பாகமும், 1ம் பிரதிவாதிக்கு 3/12 பாகமும் பாத்தியமுள்ளது.

iii) 2ம் பிரதிவாதி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக குடும்பத்தை கவனிக்காமல் தனியாக இருந்து வருகிறார். எனவே தாவா சொத்தில் வாதி தனது 12ல் 4–1/2 பாகத்தைப் பிரித்து தர பிரதிவாதிகளை கடந்த 30.01.2025ல் கேட்டதில் மறுத்து விட்டார்கள். இதனால் வாதி கடந்த 17.02.2025ல் வில்லங்கம் பரிசீலித்ததில் பிரதிவாதிகள் இருவரும், தாயார் லட்சுமியும் சேர்ந்து கடந்த 26.05.2004ல் ஒரு விடுதலை ஆவணம் பதிவு செய்துள்ளது தெரிய வந்தது. அதில் கூறப்பட்டுள்ள பாக விகிதாச்சாரம் தவறானது. அதில் வாதியின் பாகத்தையும் சேர்த்து 1ம் பிரதிவாதி வாதிக்கு தெரியாமல் விடுதலை பெற்றுள்ளது தற்போது தான் தெரிய வந்தது.

iv) எனவே மேற்படி 26.05.2004ம் தேதிய காங்கயம் சார்பதிவக விடுதலை ஆவண எண். 679/2004 வாதியை கட்டுப்படுத்தாது. எனவே இந்து வாரிசுரிமை சட்டம் 1956ன் படி மேற்படி பழனிசாமி இறந்த தேதியில் 1ம் பிரதிவாதிக்கு எவ்வித பாத்தியமும் இல்லை. பழனிசாமி இறந்த போது இருந்த Notional partition shareல் தான் 1ம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் இருந்துள்ளது. இந்நிலையில் சட்டத்திற்கு புறம்பான விடுதலை ஆவணம் ஏற்படுத்தி இருந்தாலும் சட்டப்படி வாதியும் பிரதிவாதிகளும் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாகத்தான் கருத வேண்டும். எனவே பிரதிவாதிகள் இருவரும் தாவா சொத்தில் வாதியின் 12ல் 4–1/2 பாகத்தைப் பிரத்து தர வேண்டியதாகும்.

v) தாவா சொத்துக்களை நலம்திகடு கண்டு 12 சம பாகங்களாக பிரித்து அதில் தொடர்ச்சியாக 4–1/2 சம பாகத்தை வாதிக்கு ஒதுக்கீடு செய்ய பிரதிவாதிகளை வாதி கடந்த 30.01.2025ல் நேரில் கேட்டும் பிரதிவாதிகள் ஒத்துவராததால் வாதி தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 06.03.2025ல் அறிவிப்பு

அனுப்பியதில் பிரதிவாதிகள் இருவரும் கடந்த 07.03.2025 ல் பெற்றுக் கொண்டும் பாகப்பிரிவினைக்கு பிரதிவாதிகள் ஒத்துவரவில்லை. பின்னிட்டு கடந்த 04.04.2026 ம் தேதியில் 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். வாதியின் தகப்பனார் ஏற்படுத்திக் கொடுத்த விடுதலை ஆவணம் வாதியைக் கட்டுப்படுத்தாது. மேற்படி ஆவணம் வில்லங்கம் பரிசீலித்த போது தான் வாதிக்கு தெரிய வந்தது. 1ம் பிரதிவாதி தனது பதிலறிவிப்பில் தனது திருமண தேதியை வேண்டுமென்றே மாற்றி கூறியுள்ளார். எனவே தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிக்கு தாவாவில் கோரியுள்ளபடி பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் வழங்கி உத்தரவிட வேண்டும் என்பதே வாதி தரப்பு வழக்குரை சுருக்கமாகும்.

<u>2) 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரைச் சுருக்கம்:–</u>

i) வாதியின் தாவா பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும், ஆவணங்கள் படியும் செல்லத்தக்கதல்ல. இப்பிரதிவாதி இந்த எதிர்வழக்குரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்றவைகளை வாதியே கண்டிப்பாக ஆவணப்பூர்வமாக நிரூபிக்க வேண்டியது.

ii) தாவா சொத்துக்கள் யாவும் பழனிச்சாமிக்கு நத்தம் பட்டாப்படி பாத்தியப்பட்டு பழனிச்சாமியின் தனிப்பட்ட அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்த தனிப்பட்ட சொத்தாகும். மேற்படி சொத்தில் பிரதிவாதிகளின் தகப்பனார் பழனிச்சாமி அவரது காலத்தில் மண் சுவற்றில் ஓட்டால் வேயப்பட்ட கூரை கொண்ட வீடு கட்டி சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்து மேற்படியார் 2003ம் வருடம் காலமான பிறகு அவரது மனைவி லட்சுமி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டிருந்தது. மேற்படி பாத்தியப்பட்டிருந்த

சொத்துக்களை மேற்படி மூன்று வாரிசுகளும் பாகம் பிரித்து கொள்ள ஏதுவாக இல்லாமல் இருந்து வந்ததால் கடந்த 26.05.2004–ல் பதிவு செய்யப்பட்ட பாக விடுதலை ஆவண எண்.679/2004 ன்படி 1ம் பிரதிவாதி ரூ.14,000/–ஐ மேற்படி 2ம் பிரதிவாதி மற்றும் தாயாரான லட்சுமி ஆகியோர்களுக்கு செலுத்தி மேற்படி சொத்தினை தனிப்பட விடுதலை ஆவணம் மூலம் உரிமையடைந்து அனுபவித்து வருகிறார்.

iii) மேற்படி சொத்தினை 1ம் பிரதிவாதி பாக பாத்திய விடுதலை மூலம் தனிப்பட உரிமையும், சுவாதீனமும் அடைந்து மேற்படி இடத்தில் இருந்த பழைய மண் சுவர் வீட்டை கடந்த 2013ம் வருடம் முழுவதுமாக இடித்து விட்டு புதிதாக பெரும் பொருட்செலவில் சிமெண்ட் சீட் கூரை கொண்ட வீட்டை சிமெண்ட் கற்களை கொண்டு கட்டி 1ம் பிரதிவாதி பெயரில் சொத்து வரி விதிப்பு செய்து அதற்கு கதவு எண்.7/151–ஐ பெற்றும், மின் இணைப்பு பெற்றும், பட்டா மாறுதல் பெற்றும் தொடர்ச்சியாக கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தனிப்பட்ட உரிமையாளராக வைத்து அனுபவித்து வருகிறார்.

iv) 1ம் பிரதிவாதிக்கு கடந்த 1990ம் வருடம் சின்னச்சாமி என்பவருடன் திருமணம் நடைபெற்று பிரதீபா என்ற பெண் மகளும், பொன்சங்கர் என்ற மகனும் வாரிசுகளாக இருந்து வந்தார்கள். மேற்படி பொன்சங்கர் பிறந்து மாத குழந்தையாக இருந்த போது 1ம் பிரதிவாதியின் கணவருக்கு இரத்த புற்றுநோய் ஏற்பட்டு கடந்த 1994ம் வருடம் இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதி கைக்குழந்தையுடன் தனது பெற்றோர் பராமரிப்பில் தாவா சொத்தில் கடந்த 1994ம் வருடம் முதல் தகப்பனார் குடும்பத்துடன் ஒரே குடும்பமாக வசித்து கொண்டு கூலி வேலைக்கு சென்று சம்பாதித்து ஜீவனம் செய்து வழக்கு சொத்திலேயே தொடர்ந்து குடியிருந்து அனுபவித்து வருகிறார்.

v) 2ம் பிரதிவாதிக்கு கடந்த 1992ம் வருடம் கரட்டுப்பாளையத்தை சார்ந்த லதாமணி என்பவருக்கும் திருமணம் நடைபெற்று மேற்படியார் திருமணத்திற்கு பின்னிட்டு கரட்டுப்பாளையத்தில் உள்ள லதாமணி குடும்பத்துடன் நிரந்தரமாக கரட்டுப்பாளையத்திலேயே தங்கி பவர்லூம் தொழில் செய்து வந்தார். மேற்படியாரின் பவர்லூம் தறி தொழிலை விஸ்தரிப்பு செய்வதற்காக கடந்த 2004ம் வருடம் பணம் தேவைப்பட்டதால் 2ம் பிரதிவாதிக்கு மேற்படி தாவா சொத்து தேவையில்லை என கருதி தாவா சொத்தை ரூ.14,000/-க்கு 1ம் பிரதிவாதிக்கு விடுதலை செய்து கொடுத்து விட்டு 1ம் பிரதிவாதியிடமிருந்து மேற்படி பணத்தை பெற்று கொண்டு சென்று மேற்படி தொழிலை விஸ்தரிப்பு செய்து தற்பொழுது நல்ல நிலையில் வாழ்ந்து வருகிறார்.

vi) மேற்படி சொத்து குறித்து கடந்த 26.05.2004ல் 2ம் பிரதிவாதி அவரது தாயாரான லட்சுமியுடன் சேர்ந்து பாகபாத்திய விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்த விபரம் வாதிக்கு நன்கு தெரியும் மேற்படி சங்கதிகளை வேண்டுமென்றே மறைத்து ஆவண தேதியிலிருந்து 22 ஆண்டுகள் கழித்தும், வாதி உரிமை வயதை அடைந்து 13 ஆண்டுகள் கழித்தும் பொய்யாக வழக்கை தாக்கல் செய்து வேண்டுமென்றே 1ம் பிரதிவாதியை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய் அறிவிப்பு அனுப்பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்களில் வாதி கடந்த 21 ஆண்டுகளுக்கும் மேலாக சுவாதீனத்திலும் இல்லை. இவ்வழக்கை வாதியும், 2ம் பிரதிவாதியும் ஒரே விலாசத்தில் வசித்துக்கொண்டு இருவரும் ஒருவருக்கொருவர் சேர்ந்து கொண்டு வேண்டுமென்றே உண்மைகளை மறைத்து பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கமாகும்.

**3. எழுவினாக்கள் :–**

மேற்படி இரு தரப்பு வாதுரைகளையும், வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கின் தீர்விற்காக கடந்த 04.11.2025 அன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட 1 முதல் 3 எழுவினாக்களை வனைந்துள்ளது.

**4. எழுவினாக்கள் 1 முதல் 3 :–**

| | |
|---|---|
| **எழுவினா – 1** | வாதி தாவா சொத்தை பொறுத்து கடந்த 26.05.2004 ல் பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டார் என்பது உண்மையா? |
| **எழுவினா – 2** | தாவா சொத்துக்களை பொறுத்து வாதிக்கு தாவாவில் கோரியுள்ளபடி பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| **எழுவினா – 3** | வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன? |

5. இந்த வழக்கில் வாதுரையின்போது வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் தங்களுடைய வாதத்தின்போது முன்வைக்கப்பட்ட வாதுரையின் பேரிலும் இந்த வழக்கு ஆவணங்களை பரிசீலித்த வகையிலும் இந்த வழக்கில் ஒருமித்த தீர்வு காணும் வகையில் கடந்த 04.11.2025 அன்று இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட எழுவினா எண்.1 ஐ இன்று இந்நீதிமன்றம் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 14 விதி 5 ன் கீழ் பின்வருமாறு திருத்தி அமைக்கிறது.

**6. திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா எண் 1 :–**

| | |
|---|---|
| **திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா – 1** | தாவா சொத்தை பொறுத்து கடந்த 26.05.2004 தேதியில் 1ம் பிரதிவாதிக்கு பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா? |

7. வழக்காவணங்களின் பரிசீலனையிலிருந்து இவ்வழக்கின் தீர்விற்காக இன்று இந்நீதிமன்றம் திருத்தி அமைத்துள்ள எழுவினா எண்.1 ஐ பொறுத்து இரு தரப்பிலும் போதிய சாட்சியங்கள் முன்னிடப்பட்டுள்ளதால் மேற்படி திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா எண்.1 ற்கு தீர்வு காண்பது உபயதரப்பினர்களை எவ்விதத்திலும் பாதிப்படைய செய்யாது என்று தீர்மானித்து மேற்படி திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா எண்.1 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

8. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி திரு. சதீஸ்குமார் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு சாட்சிகளாக திரு. தங்கராஜ் என்பவர் வா.சா.2 ஆகவும், திரு. தெய்வசிகாமணி என்பவர் வா.சா.3 ஆகவும், திரு. மாரிமுத்து என்பவர் வா.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். 1ம் பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதி திருமதி.கலைச்செல்வி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சியாக திரு.வேலுமணி என்பவர் பி.வா.சா.2 ஆகவும், திரு.சிவசாமி என்பவர் பி.வா.சா.3 ஆகவும், திரு.முத்துகுமார் என்பவர் பி.வா.சா.4 ஆகவும், திரு.மணிவேல் என்பவர் பி.வா.சா.5 ஆகவும், திரு.நாச்சிமுத்து என்பவர் பி.வா.சா.6 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

9. வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் வாதியின் தகப்பனார் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி வாதியின் அத்தை என்றும் தாவா சொத்துக்கள் பிரதிவாதிகள் தகப்பனாரும், வாதியின் தாத்தாவுமான பழனிசாமி என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட கூட்டுக் குடும்ப சொத்து என்றும்

மேற்படி பழனிசாமி தாவா சொத்தை தனது மைனர் மகனுடன் சேர்த்து கடந்த 23.03.1987 ல் அடமானம் வைத்து அனுபவித்து வந்து கடந்த 07.05.2003 ல் இறந்து விட்டார் என்றும் தாவா சொத்தில் மேற்படி பழனிசாமி இறந்த தேதியில் பழனிசாமிக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் தலா சரிபாதி பாத்தியம் இருந்தது என்றும் 2 ம் பிரதிவாதியின் சரிபாதி பாகத்தில் வாதிக்கு 2 ம் பிரதிவாதியின் மகன் என்ற முறையில் சரிபாதி பாகம் சட்டப்படி பாத்தியம் என்றும் பின்னிட்டு மேற்படி பழனிசாமி இறந்து விட்டதால் அவரது சரிபாதி பாகம் பிரதிவாதிகளுக்கும், பிரதிவாதிகளின் தாயார் லட்சுமிக்கும் தலா 1/3 பாகம் பாத்தியம் உள்ளது என்றும் லட்சுமி கடந்த 12.10.2020 ல் இறந்து விட்டார் என்றும் எனவே தாவா சொத்தில் வாதிக்கு 12 ல் 4–1/2 பாகமும், 2 ம் பிரதிவாதிக்கு 12 ல் 4–1/2 பாகமும், 1 ம் பிரதிவாதிக்கு 3/12 பாகமும் பாத்தியமுள்ளது என்றும் வாதி கடந்த 17.02.2025 ல் வில்லங்கம் பரிசீலித்ததில் பிரதிவாதிகள் இருவரும், தாயார் லட்சுமியும் சேர்ந்து கடந்த 26.05.2004 ல் தாவா சொத்தைப் பொறுத்து 1 ம் பிரதிவாதிக்கு ஒரு விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள் என்றும் மேற்படி ஆவணம் வாதியைக் கட்டுப்படுத்தாது என்றும் எனவே வாதிக்கு தாவாவில் கோரியுள்ளபடி பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் வழங்கி உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டு வாதி தரப்பில் (1997) 2 MLJ 18 P.R.Munuswamy Naidu Vs. V.Venkatesan and others, A.S.No.63/2012 & CMP.No.7567/2019 N.Kalavathy Vx. Sriramulu Naidu (Deceased) and others, 2025 (3) CTC 499 C.Murali Vs. S.Kumar @ Kumarasami and others என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்தீர்ப்புரைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

10. 1 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா சொத்துக்கள் யாவும் பழனிச்சாமிக்கு நத்தம் பட்டாப்படி பாத்தியப்பட்டு மேற்படி

சொத்தில் பிரதிவாதிகளின் தகப்பனார் பழனிச்சாமி அவரது காலத்தில் மண் சுவற்றில் ஓட்டால் வேயப்பட்ட கூரை கொண்ட வீடு கட்டி சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்து மேற்படியார் 2003 ம் வருடம் காலமான பிறகு அவரது மனைவி லட்சுமி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டிருந்து கடந்த 26.05.2004–ல் பதிவு செய்யப்பட்ட பாக விடுதலை ஆவண எண்.679/2004 ன்படி 1ம் பிரதிவாதி ரூ.14,000/–ஐ மேற்படி 2ம் பிரதிவாதி மற்றும் தாயாரான லட்சுமி ஆகியோர்களுக்கு செலுத்தி மேற்படி சொத்தினை தனிப்பட உரிமையும், சுவாதீனமும் அடைந்து பழைய மண் சுவர் வீட்டை கடந்த 2013 ம் வருடம் முழுவதுமாக இடித்து விட்டு புதிதாக பெரும் பொருட்செலவில் சிமெண்ட் சீட் கூரை கொண்ட வீட்டை சிமெண்ட் கற்களை கொண்டு கட்டி 1ம் பிரதிவாதி பெயரில் சொத்து வரி விதிப்பு செய்து அதற்கு கதவு எண்.7/151–ஐ பெற்றும், மின் இணைப்பு பெற்றும், பட்டா மாறுதல் பெற்றும் தொடர்ச்சியாக கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தனிப்பட்ட உரிமையாளராக வைத்து அனுபவித்து வருகிறார் என்றும் பாகபாத்திய விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்த விபரம் வாதிக்கு நன்கு தெரியும் என்றும் மேற்படி ஆவண தேதியிலிருந்து 22 ஆண்டுகள் கழித்தும், வாதி உரிமை வயதை அடைந்து 13 ஆண்டுகள் கழித்தும் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. மேலும் 1ம் பிரதிவாதி தரப்பில் 2026 (3) CTC 67 V.Kathiravan Vs. Veluchamy and others, 2026 (3) CTC 605 R.Ravikumar Vs. R.Nagaraj (Deceased) and others, CDJ 2019 MHC 3723 S.Mallika Vs. R.Krishnaveni என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்தீர்ப்புரைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**<u>11. திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா எண்.1 மற்றும் எழுவினா எண்.2 க்கான தீர்வு :-</u>**

| | |
|---|---|
| **திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா – 1** | தாவா சொத்தை பொறுத்து கடந்த 26.05.2004 தேதியில் 1ம் பிரதிவாதிக்கு பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா? |
| **எழுவினா – 2** | தாவா சொத்துக்களை பொறுத்து வாதிக்கு தாவாவில் கோரியுள்ளபடி பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |

12. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது பழனிச்சாமி கவுண்டர் மற்றும் லட்சுமி ஆகியோர்களுக்கு 1, 2 பிரதிவாதிகள் வாரிசுகள் என்பதும் வாதி 2ம் பிரதிவாதியின் மகன் என்பதும், பழனிச்சாமி கவுண்டர் கடந்த 07.05.2003ம் தேதியிலும், அவரது மனைவி லட்சுமி கடந்த 12.10.2020ம் தேதியிலும் இறந்துவிட்டார்கள் என்பதும் தாவா சொத்துக்களைப் பொறுத்து பழனிச்சாமி கவுண்டர் பெயரில் நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதும் தாவா சொத்தில் வீடு உள்ளது என்பதும் உபய தரப்பினர்களுக்கிடையேயான உறவுமுறையும் உபய தரப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாக உள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களாக லட்சுமி என்பவரின் இறப்பு சான்றிதழும், வா.சா.3 ஆவணமாக பழனிச்சாமிகவுண்டரின் வாரிசு சான்றிதழும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13. வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் வாதியின் தாத்தாவும், 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாருமான பழனிசாமி கவுண்டர் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட இந்து கூட்டுக் குடும்ப சொத்து என்றும் அதை பழனிசாமி கவுண்டர் அனுபவம் செய்து வந்து கடந்த 07.05.2003ம் தேதியில்

இறந்துவிட்டதில் தாவா சொத்தில் 2ம் பிரதிவாதிக்கு தலா சரிபாதி பாத்தியமும், 2ம் பிரதிவாதியின் சரிபாதி பாகத்தில் வாதிக்கு மேற்படியாரின் மகன் என்ற முறையில் சரிபாதி பாத்தியமும் உள்ளது என்றும் பழனிசாமி இறந்து விட்டதால் அவரது சரிபாதி பாகம் 1, 2 பிரதிவாதிகளுக்கும், பிரதிவாதிகளின் தாயார் லட்சுமிக்கும் தலா 1/3 பாகம் பாத்தியம் உள்ளது என்றும் லட்சுமி கடந்த 12.10.2020ம் தேதியில் இறந்து விட்டதில் தாவா சொத்தில் வாதிக்கு 12ல் 4-1/2 பாகமும், 2 ம் பிரதிவாதிக்கு 12ல் 4-1/2 பாகமும், 1ம் பிரதிவாதிக்கு 12ல் 3 பாகமும் பாத்தியம் உள்ளது என்றும் தாவா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொள்ள கேட்டதில் 1, 2 பிரதிவாதிகள் ஒத்துவரவில்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது.

14. மேற்படி சங்கதிகள் 1ம் பிரதிவாதி தரப்பில் மறுக்கப்பட்டு தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான பழனிச்சாமி என்பவருக்கு வழங்கப்பட்ட நத்தம் பட்டாவின் அடிப்படையில் மேற்படியாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து என்றும் அதில் மேற்படியார் வீடு கட்டி சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்து கடந்த 2003ம் வருடம் காலமானதற்கு பின்னிட்டு தாவா சொத்தில் அவரது வாரிசுகளான 1, 2 பிரதிவாதிகளுக்கும், மனைவியான லட்சுமி என்பவருக்கும் பாத்தியம் ஏற்பட்டு கடந்த 26.05.2004ம் தேதி 2ம் பிரதிவாதியும் மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் தாயாரான லட்சுமி என்பவரும் தாவா சொத்தில் மேற்படியார்களின் பாகத்தை பொறுத்து 1ம் பிரதிவாதியிடமிருந்து ரூ.14,000/- தொகையை பெற்றுக்கொண்டு பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள் என்றும் அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் முழு உரிமையடைந்து தாவா சொத்தில் உள்ள வீட்டை புதுப்பித்து மின் இணைப்பு பெற்று வரிவகைகள் செலுத்தி அனுபவம் செய்து

வருகிறார் என்றும் அந்த விபரம் வாதிக்கு நன்கு தெரியும் என்றும் பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 22 ஆண்டுகள் கழித்தும் வாதி உரிமை வயதை அடைந்த 13 ஆண்டுகள் கழித்தும் 1ம் பிரதிவாதியை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யாக இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும் மறுக்கப்பட்டுள்ளது.

15. தாவா சொத்துக்கள் வாதியின் தாத்தாவும், 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாருமான ஒரு பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட இந்து கூட்டுகுடும்ப சொத்துக்கள் என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையா? என்பதைப் பொறுத்து இந்நீதிமன்றம் பரிசீலிக்கும்போது வா.சா.ஆ.9 வா.சா.ஆ.10 மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆவணங்களாக மாரப்ப கவுண்டர் மகன் பழனிச்சாமி என்பவர் பெயரிலான நத்தம் பட்டா எண்.619 புல எண்.1212/17 பழைய புல எண்.503/B 0.1.35 ஹெக்டேர் சர்க்கார் புறம்போக்கு பூமியான தாவா சொத்தைப் பொறுத்து மனைவரி தோராய பட்டா அசல் மற்றும் நத்தம் கணினி சிட்டா மற்றும் அ பதிவேடு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

16. மேற்படி வா.சா.ஆ.9 வா.சா.ஆ.10 மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆவணங்களின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்தைப் பொறுத்து நத்தம் பட்டா எண்.619 ல் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரான பழனிச்சாமி கவுண்டருக்கு மனைவரி தோராய பட்டாவானது நத்தம் தனி வட்டாட்சியர் அவர்களால் கடந்த 04.03.1996ம் தேதியில் வழங்கப்பட்டுள்ளது. உபயவாதிகள் தரப்பில் பழனிச்சாமி கவுண்டரின் தகப்பனார் பெயர் மாரியப்ப கவுண்டர் என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் வா.சா.ஆ.9 மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆன பட்டாவில் பழனிச்சாமி கவுண்டரின்

தகப்பனார் பெயர் மாரப்ப கவுண்டர் என்று கண்டுள்ளது. ஆனால் வா.சா.ஆ.9 மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆன நத்தம் பட்டாக்கள் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு தாவா சொத்துக்களைப் பொறுத்து வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து உபய தரப்பினர்களுக்கிடையே பூசல் எதுவும் இல்லை.

17. வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆவணங்களான பழனிச்சாமி கவுண்டர் பெயரிலான நத்தம் கணினி சிட்டா மற்றும் அ பதிவேடு ஆவணங்களை தவிர தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதைப் பொறுத்து பழனிச்சாமி கவுண்டர் முன்னோர்கள் பெயரிலான தாவா சொத்தைப் பொறுத்த உரிமை ஆவணங்களோ மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களோ மற்றும் பிற ஆவணங்களோ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

18. வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **தாவா சொத்துக்கள் பரம்பரை சொத்துக்கள் என்பதை காட்ட நான் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்** என்றும் **தாவா சொத்தை பொறுத்த பட்டாவானது நத்தம் பகுதியில் எனது தாத்தா குடியேறியதால் அவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் என் தாத்தாவுடைய தகப்பனாரான மாரியப்ப கவுண்டர் தாவா சொத்தில் குடியேறினார். அந்த அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது. என் தாத்தாவின் தகப்பனார் மாரியப்ப கவுண்டர் என்பவர் தாவா சொத்தில் குடியேறினார் என்பதை காட்டுவதற்கு என் வசம் ஆவணங்கள்**

**<u>எதுவும் இல்லை என்றால் பட்டா கேட்டுள்ளேன். இன்னும் கிடைக்கவில்லை</u>** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

19. ஆனால் வாதி தரப்பில் வழக்குரையிலும், வா.சா.1ன் முதல் விசாரணை சாட்சியத்திலும் வாதியின் தாத்தாவான பழனிச்சாமி கவுண்டரின் தகப்பனாரான மாரியப்ப கவுண்டர் தான் முதன்முதலில் தாவா சொத்தில் தன் மகன்களோடு குடியேறி வீடுகட்டி அனுபவம் செய்து வந்தார் என்பதைப் பொறுத்து குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை. மேலும் வா.சா.1 தனது சாட்சியத்தில் தாவா சொத்தைப் பொறுத்து மாரியப்ப கவுண்டர் பெயரில் பட்டா உள்ளதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி மாரியப்ப கவுண்டர் பெயரிலான தாவா சொத்தைப் பொறுத்த பட்டா எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

20. வா.சா.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆகியோர்கள் தங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் **<u>வாதியின் தாத்தா பழனிச்சாமி கவுண்டர் அவரது சகோதரர் சுப்புராய கவுண்டர் மேற்படியார்களது தகப்பனார் மாரியப்ப கவுண்டர் ஆகியோர்கள் அய்யம்பாளையத்தில் ஈரோடு செல்லும் ரோட்டிற்கு மேல்புறத்தில் உள்ள வீட்டில் பூர்வீகமாக குடியிருந்து வந்தார்கள்</u>** என்றும் மாரியப்ப கவுண்டர் நான் சிறு வயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

21. பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணையின்போது வாதி தரப்பில் <u>1ம் பிரதிவாதியின் தாத்தா மாரியப்ப கவுண்டர் இடைக்காட்டு வலசு கிராமத்தில் இருந்த சங்கம் தோட்டம் என்ற பூமியை விற்றுவிட்டு தன் மகன்களான பழனிச்சாமி கவுண்டர் மற்றும் சுப்புராய கவுண்டர் ஆகியோர்களோடு</u>

<u>அய்யம்பாளையம் வந்து தாவா சொத்தில் குடியேறினார்கள்</u> என்று கேள்விகள் கேட்கப்பட்டு அதை பி.வா.சா.1 மறுத்துள்ளார். ஆனால் மேற்படி சங்கதிகள் வாதியின் வழக்குரையிலும் வா.சா.1ன் முதல் விசாரணை சாட்சியத்திலும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை.

22. வாதி தரப்பில் வாதுரையின்போது வாதியின் தாத்தாவான பழனிச்சாமி கவுண்டரின் தகப்பனாரான மாரியப்ப கவுண்டர் தனது சொந்த ஊரான இடைக்காட்டு வலசில் இருந்த சங்கம் தோட்டம் என்ற பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்துவிட்டு அந்த பணத்தை கொண்டு தனது மகன்களான பழனிச்சாமி கவுண்டர் மற்றும் சுப்பராய கவுண்டர் ஆகியோர்களோடு தாவா சொத்தில் முதன்முதலில் குடியேறி வீடு கட்டி அனுபவம் செய்து வந்து இறந்ததற்கு பின்னிட்டு தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டர் மற்றும் சுப்பராய கவுண்டர் ஆகியோர்களால் பாகம் செய்து கொள்ளப்பட்டு அனுபவம் செய்து வரப்பட்டதன் அடிப்படையில் தாவா சொத்தைப் பொறுத்து பூர்வீக சொத்து என்ற முறையில் பழனிச்சாமி கவுண்டர் பெயருக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

23. ஆனால் மேற்படி சங்கதிகளை பொறுத்து வாதியின் வழக்குரையிலும் வா.சா.1ன் முதல் விசாரணை சாட்சியத்திலும் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை. இதற்கு வாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க எவ்வித விளக்கமும் இல்லை. 1ம் பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான பழனிச்சாமி கவுண்டரின் தகப்பனாரான மாரியப்ப கவுண்டர் சொந்த ஊர் இடைக்காட்டு வலசு என்றும் மாரியப்ப கவுண்டர் அய்யம்பாளையம் கிராமத்திற்கு வரவும் இல்லை தாவா சொத்தில் ஒருபோதும் குடியேறி அனுபவம் செய்யவில்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது.

24. மேற்படி சங்கதிகளை பரிசீலிக்கும்போது பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் என் தாத்தாவிற்கு சொந்த ஊர் ராசாத்தாவலசு கிராமம், இடைக்காட்டு வலசு என்று சொன்னால் சரிதான். அங்கு சங்கம் தோட்டம் என்ற பூர்வீக பூமி என் தாத்தாவிற்கு இருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த பூமியை விற்றுவிட்டு அய்யம்பாளையம் வந்துவிட்டார்கள் என்றால் இல்லை. முதலில் எட்டிமடை சென்றுவிட்டு மேட்டுப்பாளையத்தில் குத்தகைக்கு சிறிது நாள் ஓட்டிவிட்டு பிறகு தான் அய்யம்பாளையம் வந்தார்கள் என்றும் வழக்கு சொத்தில் மாரியப்ப கவுண்டர், சுப்பராய கவுண்டர் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் ஆகியோர்கள் குடியேறினார்கள் என்றால் இல்லை. என் தகப்பனார் மற்றும் எனது பெரியப்பா சுப்பராய கவுண்டர் ஆகியோர்கள் மட்டுமே குடியேறினார்கள். மாரியப்ப கவுண்டர் அய்யம்பாளையத்தில் வைத்து தான் இறந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் பிறப்பதற்கு முன்பே அவர் இறந்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

25. வாதி தரப்பில் பழனிச்சாமி கவுண்டரின் தந்தையான மாரியப்ப கவுண்டர் என்பவர் இடைக்காட்டு வலசில் இருந்த சங்கம் தோட்டம் என்ற சொத்தை விற்பனை செய்துவிட்டு அந்த பணத்தை கொண்டு தாவா சொத்தில் தன் மகன்களோடு குடியேறி வீடுகட்டி அனுபவம் செய்து வந்தார் என்றும் மேற்படியார் இறந்ததற்கு பின்பு அந்த சொத்துக்களை பழனிச்சாமி கவுண்டரும் சுப்புராய கவுண்டரும் பாகம் செய்து அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் கூட்டுக்குடும்ப பூர்வீக சொத்துக்களான தாவா சொத்துக்களைப் பொறுத்து பழனிச்சாமி கவுண்டர் பெயருக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டது என்றும் வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதிகளைப் பொறுத்து தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யும் பொறுப்பு வாதி வசமே உள்ளது.

26. இந்நிலையில் மாரியப்ப கவுண்டர் இடைக்காட்டு வலசில் இருந்த பூர்வீக சொத்தான சங்கம் தோட்டம் என்ற தோட்டத்தை விற்பனை செய்துவிட்டு அந்த பணத்தை கொண்டு அய்யம்பாளையம் வந்து தாவா சொத்தில் குடியேறி வீடுகட்டி அனுபவம் செய்து வந்தார் என்பதைப் பொறுத்து நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் தாவா சொத்தைப் பொறுத்து மாரியப்ப கவுண்டர் பெயரிலான உரிமை ஆவணங்களோ பிற ஆவணங்களோ வருவாய்த்துறை ஆவணங்களோ எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

27. மேலும் வா.சா.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆகியோர்கள் தங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் வாதியின் தாத்தா பழனிச்சாமி கவுண்டர் அவரது சகோதரர் சுப்புராய கவுண்டர் மேற்படியார்களது தகப்பனார் மாரியப்ப கவுண்டர் ஆகியோர்கள் அய்யம்பாளையத்தில் ஈரோடு செல்லும் ரோட்டிற்கு மேல்புறத்தில் உள்ள வீட்டில் பூர்வீகமாக குடியிருந்து வந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

28. ஆனால் வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில் **நான் அய்யம்பாளையம் ஊரை சேர்ந்தவர் இல்லை என்றால் சரிதான்** என்றும் **வாதி பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு நான் உறவினர்கள் அல்ல என்றால் சரிதான்** என்றும் **பழனிச்சாமி அய்யம்பாளையத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்து 1, 2 பிரதிவாதிகளை வளர்த்தார் என்றால் சரிதான்** என்றும் **எப்போது பழனிச்சாமி கவுண்டரின் தகப்பனார் அய்யம்பாளையம் கிராமத்திற்கு வந்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் தெரியாது** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

29. வா.சா.3 தனது குறுக்கு விசாரணையில் **மாரியப்ப கவுண்டர் எப்போது அய்யம்பாளையத்திற்கு வந்தார் எங்கு வந்து குடியேறினார் என்பது உள்ளிட்ட விபரங்கள் நான் மேற்படி சமயத்தில் பிறக்காத காரணத்தினால் எனக்கு தெரியாது என்றால் சரிதான்** என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.4 தனது குறுக்கு **விசாரணையில் நான் மாரப்ப கவுண்டர் என்பவரை நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான்** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

30. மேற்படி வா.சா.2 முதல் வா.சா.4 வரையிலானவர்களின் குறுக்கு விசாரணை சாட்சியத்தை பரிசீலிக்கும்போது மாரியப்ப கவுண்டர் இடைக்காட்டு வலசில் இருந்த தனது பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டு அந்த பணத்தை கொண்டு அய்யம்பாளையத்தில் உள்ள தாவா சொத்தில் தன் மகன்களோடு முதன்முதலில் குடியேறி வீடு கட்டி வசித்து அனுபவம் செய்து வந்தார் என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளைப் பொறுத்து வா.சா.2 முதல் வா.சா.4 வரையிலானவர்களுக்கு நேரடியாக எந்த விபரமும் தெரியாது என்பது ஊர்ஜிதமாகிறது. மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் பிற நபர்கள் யாரும் வாதி தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை.

31. மேலும் வாதி தரப்பில் மாரியப்ப கவுண்டர் அய்யம்பாளையத்தில் உள்ள தாவா சொத்தில் குடியேறி வசித்து வந்து அங்கேயே இறந்துவிட்டார் என்று சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் 1ம் பிரதிவாதி தரப்பில் மறுக்கப்பட்டு மாரியப்ப கவுண்டர் அய்யம்பாளையம் கிராமத்தில் உள்ள தாவா சொத்திற்கு ஒருபோதும் வரவே இல்லை என்று மறுக்கப்பட்டுள்ள நிலையில் மாரியப்ப கவுண்டர் அய்யம்பாளையத்தில் உள்ள தாவா சொத்தில் குடியேறி வசித்து வந்து அய்யம்பாளையம் கிராமத்தில் தான் இறந்தார் என்பதை பொறுத்து நிரூபணம்

செய்யும் வகையில் மாரியப்ப கவுண்டர் என்பவரின் இறப்பு சான்றிதழோ பிற ஆவணங்களோ எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

32. பி.வா.சா.2 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலானவர்கள் தங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் மாரியப்ப கவுண்டர் தனது காலத்தில் இடைக்காட்டு வலசில் இருந்த சொத்துக்களை விற்பனை செய்துவிட்டு கோவை மதுக்கரை அருகில் உள்ள எட்டிமடைக்கு குடிபெயர்ந்து அங்கேயே வசித்து வந்து அங்கேயே காலமாகிவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆனால் பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில் **1ம் பிரதிவாதியின் தாத்தா மாரியப்ப கவுண்டர் என்பவரை நான் பார்த்தது கிடையாது என்று சொன்னால் சரிதான்** என்றும் **எனக்கு சிறு வயதாக இருக்கும்போது மாரியப்ப கவுண்டர் இறந்துவிட்டாரா என்றால் அது எனக்கு தெரியாது** என்றும் **அவர்கள் இந்த ஊருக்கு வரும்போது அவர் வரவில்லை** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

33. பி.வா.சா.3 தனது குறுக்கு விசாரணையில் **மாரியப்ப கவுண்டரை நான் பார்த்துள்ளேன் என்றால் இல்லை என்றும் மாரியப்ப கவுண்டர் எங்கு இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் எட்டிமடையில் வைத்து இறந்தார். அது எனக்கு எப்படி தெரியும் என்றால் பழனிச்சாமி கவுண்டர் சொல்லி தெரியும்** என்றும் பி.வா.சா.4 தனது குறுக்கு விசாரணையில் **அவர் பெயர் மாரியப்ப கவுண்டர். அவரை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை** என்றும் **இடைக்காட்டு வலசில் இருந்து மாரியப்ப கவுண்டர் எங்கு குடிபெயர்ந்தார் என்ற விபரங்கள் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். சொல்ல கேள்விப்பட்டுள்ளேன்** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

34. பி.வா.சா.5 தனது குறுக்கு விசாரணையில் **பழனிச்சாமியுடன் அய்யம்பாளையம் தாவா சொத்திற்கு யார்யார் வந்து குடியேறினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம்** என்றும் பி.வா.சா.6 தனது குறுக்கு விசாரணையில் **நான் மாரியப்ப கவுண்டரை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவர் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் இடைக்காட்டுவலசு என்று நான் கேள்விப்பட்டுள்ளேன்** என்றும் **மாரியப்ப கவுண்டர் தனது மகன்கள் சுப்பராய கவுண்டர் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் ஆகியோர்களுடன் அய்யம்பாளையம் கிராமத்திற்கு குடி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் பழனிச்சாமி கவுண்டர் வந்தது மட்டும் தான் எனக்கு தெரியும்** என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி பி.வா.சா.2 முதல் பி.வா.சா.6 வரையிலானவர்களின் சாட்சியங்களை கவனமாக பரிசீலிக்கும்போது மாரியப்ப கவுண்டர் எங்கு வசித்து வந்தார் எங்கு வைத்து இறந்தார் என்பதைப் பொறுத்தும் மேற்படி சாட்சிகளுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்பதும் பழனிச்சாமி கவுண்டர் தாவா சொத்தில் வீடு கட்டி வசித்து அனுபவம் செய்து வந்துள்ளார் என்பதும் தெளிவாகிறது.

35. மேலும் வாதி தரப்பில் தாவா சொத்துக்களில் பழனிச்சாமி கவுண்டரின் தகப்பனாரான மாரியப்ப கவுண்டர் என்பவர் குடியேறி வீடு கட்டி அனுபவம் செய்து வந்தார் என்றும் மேற்படியாரின் இறப்பிற்கு பின்னிட்டு அந்த சொத்துக்களை பழனிச்சாமி கவுண்டரும் அவரது சகோதரருமான சுப்புராய கவுண்டரும் பாகம் செய்துகொண்டு அனுபவம் செய்து வந்ததில் பழனிச்சாமி கவுண்டருக்கு தாவா சொத்துக்களைப் பொறுத்து பூர்வீக கூட்டு குடும்ப சொத்துக்கள் என்ற அடிப்படையில் நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் 1ம் பிரதிவாதி தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வாதி தரப்பு சங்கதிகளைப் பொறுத்து வாதியின் வழக்குரையிலும் வா.சா.1 ன் சாட்சியத்திலும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை.

36. பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **<u>அய்யம்பாளையத்தில் குடியேறிய சொத்தில் என் தகப்பனார் வடபுறமும் எனது பெரியப்பா தென்புறமும் பங்கி எடுத்து கொண்டார்கள் என்றால் சரிதான்</u>** என்றும் சாட்சியம் அளித்துள்ளார். பி.வா.சா.4 தனது குறுக்கு விசாரணையில் **<u>அய்யம்பாளையம் சொத்தை சுப்புராய கவுண்டரும், பழனிச்சாமி கவுண்டரும் எவ்வாறு பிரித்துக்கொண்டார்கள் என்றால் அவர்கள் பிரித்துக் கொள்ளவில்லை. சுப்பராய கவுண்டர் அவரது மனைவியின் சொத்தான நல்லம்மாள் சொத்தில் தான் குடியிருந்தார்</u>** என்று சாட்சியம் அளித்துள்ளார். தாவா சொத்துக்களை சுப்புராய கவுண்டர் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் ஆகியோர் பாகம் செய்து கொண்டார்கள் என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் அதைப் பொறுத்து நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

37. வாதி தரப்பில் வா.சா.ஆ.11 ஆவணமாக 07.12.2010 தேதியிட்ட ஜெகதீஷ் என்பவருக்கு தங்கம்மாள் மற்றும் சுமதி ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தங்கம்மாள் மற்றும் சுமதி ஆகியோர்கள் வாதியின் தாத்தா பழனிச்சாமி கவுண்டரின் சகோதரரான சுப்பராய கவுண்டர் மற்றும் அவரது மனைவி நல்லம்மாள் ஆகியோரின் வாரிசுகள் என்பதும் மேற்படி கிரைய சொத்துக்கள் தாவா சொத்திற்கு அருகில் உள்ளது என்பதும் அந்த சொத்துக்களைப் பொறுத்து நல்லம்மாள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதும் உபய தரப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

38. வா.சா.ஆ.11 ஆன கிரைய ஆவணத்தில் எங்களுக்கு தாயாரான நல்லம்மாளுக்கு இதனடியிற்கண்ட சொத்தானது தனி வட்டாட்சியர், நத்தம் நிலவரித்திட்டம் காங்கயம் அவர்களால் வழங்கப்பட்ட மனைவரி பட்டா எண்.500 ன்படி பாத்தியப்பட்டு எங்கள் தாயாரின் **<u>தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்து என கண்டு</u>** மேற்படி சொத்துக்கள் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் கிரைய சொத்துக்கள் மாரியப்ப கவுண்டரின் சொத்துக்களை பாகம் செய்து கொண்ட வகையில் சுப்புராய கவுண்டருக்கு பாகம் ஒதுக்கப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என வாசகங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. சுப்புராய கவுண்டரின் மனைவியான நல்லம்மாள் என்பவருக்கு பட்டாவின் அடிப்படையில் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என கண்டே மேற்படி வா.சா.ஆ.11 கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

39. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின்படி தாவா சொத்துக்கள் மாரியப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட வகையில் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதைப் பொறுத்தும் மேற்படி சொத்துக்களை பழனிச்சாமி கவுண்டரும் சுப்புராய கவுண்டரும் பாகம் செய்து கொண்டார்கள் என்பதைப் பொறுத்தும் நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிடப்படாத நிலையில் **<u>அய்யம்பாளையத்தில் குடியேறிய சொத்தில் என் தகப்பனார் வடபுறமும் எனது பெரியப்பா தென்புறமும் பங்கி எடுத்து கொண்டார்கள்</u>** என்று பி.வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளதை மட்டும் வைத்துக்கொண்டு மாரியப்ப கவுண்டர் தாவா சொத்துக்களில் முதன்முதலில் குடியேறி அனுபவம் செய்து

வந்தார் என்றும் தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும் தீர்மானம் செய்ய இயலாது.

40. மேலும் வாதி தரப்பில் தாவா சொத்தானது பழனிச்சாமி கவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதாலேயே வா.சா.ஆ.1 ஆவணமான அடமான ஆவணத்தை தனது மைனர் மகனான 2ம் பிரதிவாதிக்கும் சேர்த்து பழனிச்சாமி கவுண்டர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றும் வா.சா.ஆ.4 ஆவணமான பாகபாத்திய விடுதலை ஆவணத்திலும் தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டருக்கு பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று கண்டுள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகள் 1ம் பிரதிவாதி தரப்பில் மறுக்கப்பட்டு மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிதுரார்ஜித வகையில் என்ற வாசகங்கள் கண்டுள்ளதாலேயே தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று கருத இயலாது என்று மறுக்கப்பட்டுள்ளது.

41. மேற்படி சங்கதிகளைப் பொறுத்து பரிசீலிக்கும்போது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணமான 23.03.1987 தேதியிட்ட அடமான ஆவணத்தை பரிசீலிக்கும்போது 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரான பழனிச்சாமி என்பவர் தன் மகனான மைனர் 2ம் பிரதிவாதிக்கும் சேர்த்து தாவா சொத்தைப் பொறுத்து மேற்படி அடமான ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். மேற்படி அடமான ஆவணத்தில் 2ம் பிரதிவாதியின் பெயர் அழகுநாச்சிமுத்து என்று கண்டுள்ளது. வழக்காவணங்கள் மற்றும் இரு தரப்பு சாட்சியங்களை பரிசீலிக்கும்போது 2ம் பிரதிவாதி தனது பெயரான அழகு நாச்சிமுத்து என்பதை ரவி என்று மாற்றிக்கொண்டார் என்பதைப் பொறுத்து

உபய தரப்பினர்களுக்கிடையே பூசல் எதுவும் இல்லை. 2ம் பிரதிவாதி இந்த வழக்கில் தோன்றாத்தரப்பினராக இருந்து வருகிறார்.

42. மேற்படி வா.சா.ஆ.1 அடமான ஆவணத்தில் கண்டுள்ள அடமான சொத்துக்களான தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டு வாசகங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. மேலும் வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 26.05.2004 தேதியிட்ட பாகபாத்திய விடுதலை ஆவணத்தை பரிசீலிக்கும்போது காலம்சென்ற பழனிச்சாமி என்பவரின் மனைவி லட்சுமி மற்றும் 2ம் பிரதிவாதி ரவி ஆகியோர்கள் சேர்ந்து ரூ.14,000/– தொகையை ரொக்கமாக 1ம் பிரதிவாதியிடம் இருந்து பெற்றுக்கொண்டு தாவா சொத்தைப் பொறுத்து தங்களது பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு விடுதலை செய்து மேற்படி பதிவு செய்யப்பட்ட பாகபாத்திய விடுதலை ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள்.

43. மேற்படி வா.சா.ஆ.4 பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் **எங்களில் 1ம் இலக்கமிட்டவருக்கு கணவரும், 2ம் இலக்கமிட்டவருக்கும் உங்களுக்கும் தகப்பனாருமான பழனிச்சாமிக்கு பிதுரார்ஜித வகையிலும் பட்டா எண்.619ன் படியும் பாத்தியப்பட்டு** மேற்படி பழனிச்சாமியின் சுவாதீன அனுபோகத்தில் இருந்து வந்த என்று வாசகங்கள் கண்டுள்ளது. பி.வா.சா.ஆ.1 ஆன பட்டாவின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்தான சர்க்கார் புறம்போக்கு நிலத்தைப் பொறுத்து பழனிச்சாமி கவுண்டர் பெயருக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் நத்தம் நிலவரித்திட்ட தனிவட்டாட்சியர் அவர்களால் மனைவரி தோராய பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டாவில் கூட்டு குடும்பத்திற்காக என கண்டும்

அல்லது கூட்டுக்குடும்ப உறுப்பினர்கள் பெயர்கள் குறிப்பிட்டும் வழங்கப்படவில்லை. மேலும் பட்டா என்பது ஒரு சொத்தைப் பொறுத்த உரிமைமூலத்திற்கான ஆவணம் அல்ல என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டவிதி ஆகும்.

44. மேலும் வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில் **பழனிச்சாமி அய்யம்பாளையத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்து 1, 2 பிரதிவாதிகளை வளர்த்தார் என்றால் சரிதான்** என்றும் வா.சா.3 தனது குறுக்கு விசாரணையில் **பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு அரசால் வழங்கப்பட்ட பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பட்டாவை நான் பார்த்ததில்லை ஆனால் அங்கு தான் குடியிருந்தார்கள்** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆவணம் மற்றும் உபய தரப்பினர்களின் சாட்சியங்கள் ஆகியவற்றின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்தான அரசு புறம்போக்கு நிலத்தில் பழனிச்சாமி கவுண்டர் என்பவர் வீடு கட்டி குடியிருந்து அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையிலேயே தாவா சொத்தைப் பொறுத்து நத்தம் தனி வட்டாட்சியரால் பழனிச்சாமி கவுண்டர் பெயருக்கு தனிப்பட்ட முறையில் பி.வா.சா.ஆ.1 ஆவணமான நத்தம் மனைவரி தோராயபட்டா வழங்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

45. பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.5 ஆவணங்களாக 1ம் பிரதிவாதி பெயரிலான மின்கட்டண, குடிநீர் கட்டண ரசீதுகள் மற்றும் வீட்டுவரி ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.8 ஆவணங்களாக வாதி, பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பும், அஞ்சல் ஒப்புகை அட்டையும், 1ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் <u>**2ம் பிரதிவாதி தாவா சொத்தில் வீட்டை மாற்றி கட்டி அதற்கு கதவு எண்.7/151 பெற்றும் மின் இணைப்பு பெற்றும் பட்டா மாறுதல் செய்தும் அனுபவம் செய்து வருகிறார் என்றால் என் ஆத்தா 2021ம் ஆண்டு தான் இறந்தார். அதனால் என் ஆத்தாவை பராமரிப்பு செய்து கொண்டு என் அத்தை வீடு கட்டி வந்ததால் அதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை**</u> என்றும் <u>**என் மாமா இறந்ததற்கு பிறகு 1ம் பிரதிவாதி அய்யம்பாளையத்தில் என் தாத்தா பாட்டியுடன் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான்**</u> என்றும் சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1ன் சாட்சியத்தின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார் என்பது தெளிவாகிறது.

46. தாவா சொத்துக்களைப் பொறுத்து பழனிச்சாமி கவுண்டர் பெயருக்கு தனிப்பட்ட முறையில் பி.வா.சா.ஆ.1 ஆன பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில் வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டரின் தகப்பனாரான மாரியப்ப கவுண்டர் என்பவர் இடைக்காட்டு வலசில் இருந்த தனது பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டு அந்த பணத்தை கொண்டு தாவா சொத்தில் குடியேறி வீடு கட்டி அனுபவம் செய்து வந்து இறந்ததற்கு பின்னிட்டு அவரது மகன்களான பழனிச்சாமி கவுண்டரும், சுப்புராய கவுண்டரும் தாவா சொத்தை பாகம் செய்து கொண்டு அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்களான தாவா சொத்துக்களைப் பொறுத்து பழனிச்சாமி கவுண்டர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்களான தாவா சொத்துக்களில் வாதிக்கு பிறப்பின் அடிப்படையிலேயே இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 6ன்படி பங்கு பாகம் உள்ளது என்றும் வாதி தரப்பில்

சொல்லப்பட்டுள்ள நிலையில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவுகள் 101 மற்றும் 102 ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி வாதி தரப்பு சங்கதிகளை தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யும் பொறுப்பு வாதி வசமே உள்ளது.

47. ஆனால் மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதைப் பொறுத்து நிரூபணம் செய்யும் வகையில் தாவா சொத்துக்களைப் பொறுத்த மாரியப்ப கவுண்டர் அல்லது பழனிச்சாமி கவுண்டரின் முன்னோர்கள் பெயரிலான உரிமை ஆவணங்களோ வருவாய்த்துறை ஆவணங்களோ பிற ஆவணங்களோ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் தாவா சொத்துக்களைப் பொறுத்து மாரியப்ப கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு சுப்புராய கவுண்டரும் பழனிச்சாமி கவுண்டரும் பாகம் செய்து கொண்டார்கள் என்று வாதி தரப்பில் சொல்லப்பட்ட சங்கதிகள் வாதி தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான வரையில் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும் வா.சா.2 முதல் வா.சா.4 வரையிலானவர்களின் வாய்மொழி சாட்சியங்களும் வாதியின் வழக்கிற்கு ஆதரவாக இல்லை. வாதி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட முன்தீர்ப்புரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. அவை இந்த வழக்கு சங்கதிகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் பொருந்துவதாக இல்லை.

48. 1ம் பிரதிவாதி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட 2026 (3) CTC 67 V.Kathiravan Vs. Veluchamy and others என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்தீர்ப்புரையை பரிசீலிக்கும்போது அதில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

Hindu Law – Joint Family Property – Burden of proof – Claim of Joint Family/Ancestral Property – Burden lies upon party, alleging property as Joint family or Ancestral, to plead and prove that property descended from a Common Ancestor and there existed sufficient Ancestral nucleus from which subsequent acquisitions could have been made – Mere existence of Joint Family insufficient – In absence of such evidence, property cannot be presumed as Joint Family of Ancestral.

49. மேலேகண்ட முன்தீர்ப்புரையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் ஒரு சொத்து கூட்டுக் குடும்ப சொத்து அல்லது பூர்வீக சொத்து என்று உரிமை கோரும் தரப்பினரே, அந்த சொத்து ஒரு பொதுவான மூதாதையரிடமிருந்து பரம்பரையாக வந்தது என்பதையும், பின்னர் கிரையம் பெறப்பட்ட சொத்துகள் கூட்டுக் குடும்பத்தின் பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தின் (Ancestral Nucleus) மூலம் கிரையம் பெற்றிருக்ககூடிய அளவுக்கு அத்தகைய மூலச் சொத்து இருந்தது என்பதையும் உரிய முறையில் கூறி (plead) நிரூபிக்க (prove) வேண்டும். கூட்டுக் குடும்பம் இருந்தது என்ற காரணம் மட்டும் போதுமானதல்ல என்றும் அதனாலேயே ஒரு சொத்து கூட்டுக் குடும்பச் சொத்து அல்லது மூதாதையர் சொத்து என்று கருத முடியாது. மேற்கண்ட அம்சங்களை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் இல்லையெனில், அந்த சொத்தை கூட்டுக் குடும்பச் சொத்து அல்லது மூதாதையர் சொத்து என்று சட்டப்படி அனுமானிக்க (presume) முடியாது. இவ்வழக்கிலும் தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்ப பூர்வீக சொத்துக்கள் என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொறுப்பு வாதி வசமே முழுமையாக உள்ளது.

50. எனவே மேலேகண்ட பரிசீலனைகளின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டரின் தகப்பனாரான மாரியப்ப கவுண்டர் என்பவர் இடைக்காட்டு வலசில் இருந்த தனது பூர்வீக சொத்துக்களை

விற்றுவிட்டு அந்த பணத்தை கொண்டு தாவா சொத்தில் குடியேறி வீடு கட்டி அனுபவம் செய்து வந்து இறந்ததற்கு பின்னிட்டு அவரது மகன்களான பழனிச்சாமி கவுண்டரும், சுப்புராய கவுண்டரும் தாவா சொத்தை பாகம் செய்து கொண்டு அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்களான தாவா சொத்துக்களைப் பொறுத்து பழனிச்சாமி கவுண்டர் பெயரில் பட்டா வழுங்கப்பட்டுள்ளது என்றும் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்களான தாவா சொத்துக்களில் வாதிக்கு பிறப்பின் அடிப்படையிலேயே பங்கு பாகம் உள்ளது என்றும் வாதி தரப்பில் சொல்லப்பட்ட சங்கதிகள் வாதி தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான வரையில் நிரூபணம் செய்யப்படாத நிலையில் வா.சா.ஆ.1 ஆன அடமான ஆவணத்தை அப்போது மைனராக இருந்த 2ம் பிரதிவாதிக்கும் சேர்த்து பழனிச்சாமி கவுண்டர் ஏற்படுத்திக் கொடுத்துள்ள காரணத்தினாலும் வா.சா.ஆ.4 ஆவணமான பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் தாவா சொத்துக்களைப் பொறுத்து பிதுரார்ஜிதமாக என்று வாசகங்கள் கண்டுள்ளதாலும் மட்டுமே தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்ற வாதி தரப்பு சங்கதியானது நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக தீர்மானிக்க இயலாது.

51. தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும் தாவா சொத்துக்களில் வாதிக்கு பிறப்பின் அடிப்படையிலேயே இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 6ன்படி பங்கு பாத்தியம் உள்ளது என்று வாதி தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் வாதி தனது சொந்த தகுதியின் அடிப்படையில் தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய

வேண்டுமே தவிர 1ம் பிரதிவாதி வழக்கில் உள்ள பலகீனத்தை அடிப்படையாக கொண்டு மட்டுமே வாதி தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக வாதிக்கு ஆதரவாக தீர்மானம் செய்ய இயலாது.

52. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் உபயதரப்பினர்களின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்களை பழனிச்சாமி கவுண்டர் அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் மேற்படியாருக்கு பி.வா.சா.ஆ.1 ஆன நத்தம் பட்டா தாவா சொத்துக்களைப் பொறுத்து வழங்கப்பட்டு மேற்படியார் தாவா சொத்துக்களை பொறுத்து எவ்வித ஏற்பாடுகளும் செய்யாமல் இறந்ததற்கு பின்னிட்டு தாவா சொத்துக்களைப் பொறுத்து மேற்படியாரின் முதல்நிலை வாரிசுகளான மேற்படியாரின் மனைவி லட்சுமி மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோர்கள் தாவா சொத்துக்களைப் பொறுத்து தங்கள் பாக உரிமையை பதிவு செய்யப்பட்ட ஆவணமான வா.சா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு ரூ.14,000/- தொகையை பெற்றுக்கொண்டு விட்டுக்கொடுத்துள்ளார்கள் என்பதும் அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள வீட்டில் வரி வகைகளை செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்பதும் ஊர்ஜிதமாகியுள்ள நிலையில் வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டரின் தகப்பனாரான மாரியப்ப கவுண்டர் என்பவர் இடைக்காட்டு வலசில் இருந்த தனது பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டு அந்த பணத்தை கொண்டு தாவா சொத்தில் குடியேறி வீடு கட்டி அனுபவம் செய்து வந்து இறந்ததற்கு பின்னிட்டு அவரது மகன்களான பழனிச்சாமி கவுண்டரும், சுப்புராய கவுண்டரும் தாவா சொத்தை பாகம் செய்து கொண்டு அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்களான

தாவா சொத்துக்களைப் பொறுத்து பழனிச்சாமி கவுண்டர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்களான தாவா சொத்துக்களில் வாதிக்கு பிறப்பின் அடிப்படையிலேயே இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 6ன்படி பங்கு பாகம் உள்ளது என்றும் சொல்லப்பட்ட சங்கதிகள் வாதி தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான வரையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

53. 1ம் பிரதிவாதி தரப்பில் பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட தேதியில் இருந்து 22 ஆண்டுகள் கழித்தும் வாதி உரிமை வயதை அடைந்த 13 ஆண்டுகள் கழித்தும் இந்த வழக்கு தாக்கல செய்யப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் வாதி தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **என் தகப்பனாரும் என் தகப்பனாரின் தாயாரும் 1ம் பிரதிவாதிக்கு விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்த விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் ஒரு வருடத்திற்கு முன்பு தான் தெரியும்** என்றும் **என் பிறந்த வருடம் 1993. 2004 ம் ஆண்டு எனக்கு சுமார் 12 வயது இருக்குமா என்றால் இருக்கும். 2015 ம் ஆண்டு கல்லூரி படிப்பை நான் முடித்தேன்** என்றும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

54. வழக்காவணங்கள் மற்றும் வா.சா.1ன் சாட்சியத்தை பரிசீலிக்கும்போது வா.சா.ஆ.4 பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதற்கு பின்னிட்டு சுமார் 22 ஆண்டுகள் கழித்தும் வாதி உரிமை வயதை அடைந்ததற்கு பின்னிட்டு 13 ஆண்டுகள் கழித்தும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.4 பாகபாத்திய விடுதலை

ஆவணத்தில் வாதி ஒரு தரப்பினராக இல்லை. மேலும் மேற்படி ஆவணத்தைப் பொறுத்து வாதி தரப்பில் இவ்வழக்கில் எவ்வித பரிகாரங்களும் கோரப்படவில்லை.

55. மேற்படி வா.சா.ஆ.4 ஆன பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியிலேயே ஆவண சங்கதிகள் வாதிக்கு நன்கு தெரியும் என்று 1ம் பிரதிவாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் 1ம் பிரதிவாதி தரப்பில் எவ்வித சாட்சியங்களும் முன்னிடப்படவில்லை. இவ்வழக்கானது தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும் அதனால் தாவா சொத்துக்களில் வாதிக்கு பாகம் உள்ளது என்றும் வா.சா.ஆ.4 ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் வாதி தரப்பில் சொல்லப்பட்டு இவ்வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் காலவரையறை தோஷத்தால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று 1ம் பிரதிவாதி தரப்பில் முன்வைக்கப்பட்ட எதிர்வாதம் ஏற்கும்படியாக இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

56. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலானவர்களின் சாட்சியம் மற்றும் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.6 வரையிலானவர்களின் சாட்சியம் மற்றும் இரு தரப்பு சான்றாவணங்களின் பரிசீலனையில் இருந்தும் தாவா சொத்துக்களை பழனிச்சாமி கவுண்டர் அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் மேற்படியாருக்கு பி.வா.சா.ஆ.1 ஆன நத்தம் பட்டா தாவா சொத்துக்களைப் பொறுத்து வழங்கப்பட்டு மேற்படியார் தாவா சொத்துக்களை பொறுத்து எவ்வித ஏற்பாடுகளும் செய்யாமல் இறந்ததற்கு

பின்னிட்டு தாவா சொத்துக்களைப் பொறுத்து மேற்படியாரின் முதல்நிலை வாரிசுகளான மேற்படியாரின் மனைவி லட்சுமி மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோர்கள் தாவா சொத்துக்களைப் பொறுத்து தங்கள் பாக உரிமையை பதிவு செய்யப்பட்ட ஆவணமான வா.சா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு ரூ.14,000/- தொகையை பெற்றுக்கொண்டு விட்டுக் கொடுத்துள்ளார்கள் என்பதும் அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள வீட்டை அனுபவம் செய்து வருகிறார் என்பதும் ஊர்ஜிதமாகியுள்ள நிலையில் தாவா சொத்துக்கள் வாதியின் தாத்தாவான பழனிச்சாமி கவுண்டர் என்பவரின் தகப்பனாரான மாரியப்ப கவுண்டர் என்பவர் இடைக்காட்டு வலசில் இருந்த தனது சொத்துக்களை விற்றுவிட்டு அந்த பணத்தை கொண்டு தனது மகன்களான பழனிச்சாமிகவுண்டர் மற்றும் சுப்பராய கவுண்டர் ஆகியோர்களோடு அய்யம்பாளையத்திற்கு வந்து தாவா சொத்தில் குடியேறி வீடு கட்டி அனுபவம் செய்து வந்தார் என்றும் மேற்படியார் இறந்ததற்கு பின்பு மேற்படியாரின் மகன்கள் தாவா சொத்தை பாகம் செய்துகொண்டு அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்ற அடிப்படையில் பழனிச்சாமி கவுண்டர் பெயருக்கு தாவா சொத்தைப் பொறுத்து நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் தாவா சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டரின் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும் தாவா சொத்துக்களில் இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 6ன்படி வாதிக்கு பிறப்பின் அடிப்படையிலேயே பங்கு பாகம் உள்ளது என்றும் வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் வாதி தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான வரையில் நிரூபணம் செய்யப்படாததால் வாதிக்கு தாவாவில் கோரியுள்ளபடி தாவா சொத்துக்களைப்

பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றே இந்நீதிமன்றம் தீர்மானித்து திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா எண்.1 மற்றும் எழுவினா எண்.2 க்கு தீர்வு காண்கிறது.

**57. எழுவினா எண்.3 க்கான தீர்வு :–**

| | |
|---|---|
| **எழுவினா – 3** | வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன? |

58. திருத்தப்பட்ட எழுவினா எண்.1, எழுவினா எண்.2 ஆகியவற்றிற்கு தீர்வு கண்டுள்ளதன் அடிப்படையில், வாதிக்கு மேற்கொண்டு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் வேறு எதுவுமில்லை என்றும், இவ்வழக்கின் சங்கதி மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட செலவு தொகைகளை அவரவர்களே பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து இந்த எழுவினா 3 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக**,

தாவா தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 29 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.07.29 19:58:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**வாதி தரப்பு சாட்சிகள்**:–

வா.சா.1 திரு. சதீஸ்குமார் (வாதி)

வா.சா.2 திரு. தங்கராஜ் (மூன்றாம் தரப்பினர்)

வா.சா.3 திரு. தெய்வசிகாமணி (மூன்றாம் தரப்பினர்)

வா.சா.4 திரு. மாரிமுத்து (மூன்றாம் தரப்பினர்)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:-**

பி.வா.சா.1 திருமதி. கலைச்செல்வி (1ம் பிரதிவாதி)

பி.வா.சா.2 திரு. வேலுமணி (மூன்றாம் தரப்பினர்)

பி.வா.சா.3 திரு. சிவசாமி (மூன்றாம் தரப்பினர்)

பி.வா.சா.4 திரு. முத்துக்குமார் (மூன்றாம் தரப்பினர்)

பி.வா.சா.5 திரு. மணிவேல் (மூன்றாம் தரப்பினர்)

பி.வா.சா.6 திரு. நாச்சிமுத்து (மூன்றாம் தரப்பினர்)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் </u>:-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 23.03.1987 | தேதியிட்ட அடமான ஆவணம் சான்றிட்ட கணினி நகல் |
| வா.சா.ஆ.2 | 17.02.2025 | தேதியிட்ட லட்சுமி என்பவரின் இறப்பு சான்றிதழ் கணினி நகல் |
| வா.சா.ஆ.3 | 21.03.2025 | தேதியிட்ட பழனிச்சாமி என்பவரின் வாரிசு சான்றிதழ் |
| வா.சா.ஆ.4 | 26.05.2004 | தேதியிட்ட பாகபாத்திய விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 06.03.2025 | தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | - | 1ம் பிரதிவாதிக்கு சார்வான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.7 | 07.03.2025 | தேதியிட்ட 2ம் பிரதிவாதிக்கு சார்வான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் |
| வா.சா.ஆ.8 | 04.04.2025 | தேதியிட்ட பதில் அறிவிப்பு நகல் |
| வா.சா.ஆ.9 | 30.01.2026 | தேதியிட்ட புல எண்.1212/17 க்கான நத்தம் பட்டா கணினி நகல் |
| வா.சா.ஆ.10 | 30.01.2026 | தேதியிட்ட புல எண்.1212/2017 க்கான அ பதிவேடு கணினி நகல் |
| வா.சா.ஆ.11 | 07.12.2010 | தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட கணினி நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் </u>:–

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 04.03.1996 | தேதியிட்ட மனைவரி தோராய பட்டா அசல் |
| பி.வா.சா.ஆ.2 | 26.05.2004 | தேதியிட்ட பாகபாத்திய விடுதலை பத்திரம் அசல் |
| பி.வா.சா.ஆ.3 | – | 1ம் பிரதிவாதி பெயரிலான வீட்டுவரி ரசீதுகள் (எண்ணிக்கை – 10) அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 10.01.2013 | தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரிலான மின் கட்டண ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 05.12.2025 | தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரிலான குடிநீர் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை – 2) |

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.07.29 19:58:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.